# 8வது தேசிய விஞ்ஞான மனப்பான்மை தினம் (National Scientific Temper Day - NSTD 2025)

8வது தேசிய விஞ்ஞான மனப்பான்மை தினம் (National Scientific Temper Day - NSTD 2025) அனுசரிப்பதற்கான வேண்டுகோள்

"20 ஆகஸ்ட் 2025"

அன்பார்ந்த சகோதரர்களே, நண்பர்களே மற்றும் இந்தியாவின் சக மக்களே,

20 ஆகஸ்ட் 2025 அன்று,8வது தேசிய அறிவியல் மனப்பான்மை தினத்தை (NSTD)அனுசரிக்கத் தயாராகும் இந்த நேரத்தில், நாம் அனைவரும் ஒரு முக்கியமான அரசியலமைப்பு கடமையை மீண்டும் உறுதிப்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அந்தக் கடமை,என்பது "அறிவியல் மனப்பான்மையை" வளர்ப்பதும் ஊக்குவிப்பதும் ஆகும்.

இது நமது அரசியலமைப்பின் 51A(h) விதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தேதி ஆகஸ்ட், 20 என்பது, ஒரு மிகப்பெரிய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு மூட நம்பிக்கைகளுக்கு எதிராகவும், அறிவியல் மனப்பான்மைக்காகவும் அர்ப்பணித்து போராடிய துணிச்சலான பகுத்தறிவாளரான, டாக்டர் நரேந்திர தபோல்கர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட நாள் இது. அறிவியல் மனப்பான்மையை அடக்குவதற்காகச் செயல்பட்ட சக்திகளால் அவர் கொல்லப்பட்டார். அவரது கொலையைத் தொடர்ந்து, ஸ்ரீ கோவிந்த் பன்சாரே, பேராசிரியர் எம்.எம்.கல்புர்கி மற்றும் திருமிகு. கௌரி லங்கேஷ் போன்ற பகுத்தறிவு, மெய்யாய்வு மற்றும் ஜனநாயக மதிப்புகளுக்காகப் போராடியவர்களும் கொல்லப்பட்டனர்.

அவர்களின் குரல்கள் அடக்கப்பட்டாலும், அவர்களின் பார்வை,தேசிய அறிவியல் மனப்பான்மை தினத்தின் மூலம் நம்மை வழிநடத்துகிறது.

2018 ஆம் ஆண்டு, அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு ( All India People Science Network -AIPSN) மற்றும் மகாராஷ்டிர அந்தராத் நிர்மூலன் சமிதி (MANS) இணைந்து இந்த தினத்தைத் தொடங்கின. இது இன்று ஒரு மக்கள் இயக்கமாக வளர்ந்துள்ளது.

ஆண்டுதோறும், மாணவர்கள், விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் ஆதார அடிப்படையிலான சிந்தனை மற்றும் சமூக நீதிக்கான ஒரு பொதுவான உறுதியுடன் இணைகின்றனர்.

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார், அறிவியல் மனப்பான்மையின் வளர்ச்சி இந்தியாவின் முன்னேற்றத்திற்கும் சமூக மாற்றத்திற்கும் இன்றியமையாதது என்று நம்பினார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அவருக்கு, "அறிவியல் மனப்பான்மை" என்பது ஒரு மனநிலை மட்டுமல்ல,மூடநம்பிக்கைகள், சாதிவெறி போன்ற சமூகத் தீமைகளை எதிர்ப்பதற்கான ஓர் ஆயுதம்.

அம்பேத்கார் அறிவியலை ஒரு ஜனநாயக சக்தியாகக் கருதினார். அது அனைவருக்கும் அறிவை அணுகவைத்து, சாதி மற்றும் வர்க்கத்தை கடந்து, அநீதியை கேள்வி கேட்கவும், ஒடுக்குமுறை அதிகார கட்டமைப்புகளை இடிக்கவும் மக்களை சக்தியுடையவர்களாக்கும்.

அறிவியல் மனப்பான்மையை உறுதிப்படுத்தும் பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லாக, தேசிய அறிவியல் மனப்பான்மை பிரகடன மாநாடு, கொல்கத்தாவில், 2024ஆம் ஆண்டு,பிப்ரவரி 28 அன்று நடைபெற்றது. அதன் விளைவாக வெளிவந்த "கொல்கொத்தா பிரகடனம்" ஆதார அடிப்படையிலான பகுத்தறிவு, மெய்யாய்வு சிந்தனை மற்றும் ஜனநாயக மதிப்புகளுக்கு நாம் அனைவரும் மீண்டும் உறுதிபூண வேண்டும் என்று கோருகிறது. 1981 மற்றும் 2011 பிரகடனங்களுக்குப் பிறகு சமூகம் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அங்கீகரித்து, கொல்கொத்தா பிரகடனம், அறிவியல் மனப்பான்மையின் புரிதலை விரிவுபடுத்துகிறது.

இயற்கை அறிவியல், சமூக அறிவியல், மனிதநேயம் மற்றும் சாதாரண மக்களின் வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கியது.

இன்றைய காலகட்டத்தில், தவறான தகவல்கள், போலி அறிவியல் மற்றும் வேண்டுமென்றே பரப்பப்படும் அறியாமை, விரைவாக பரவி வருகின்றன,அடிக்கடி தொழில்நுட்பத்தின் மூலமே! இவற்றை எதிர்கொள்ள அறிவு, பகுத்தறிவு மற்றும் ஆதாரங்களின் மூலம் மட்டுமே முடியும்.

"தேசிய அறிவியல் மனப்பான்மை தினம் 2025" (NSTD 2025) இறுதிப் பகுதி

"NSTD 2025" என்பது ஒரு நினைவு நிகழ்வு மட்டுமல்ல - இது ஜனநாயகம், சமூக-பொருளாதார நீதி ஆகிய மதிப்புகளை மீண்டும் கைப்பற்றும் மக்கள் இயக்கமாகும்!

இது ஒரு மேடை.ஒவ்வொரு கேள்விக்கும் மதிப்பளிக்கப்படும், ஒவ்வொரு சந்தேகத்திற்கும் மரியாதை காட்டப்படும், ஒவ்வொரு குடிமகனும் தகவலறிந்த, உள்ளடக்கிய, தன்னிறைவு மற்றும் சமத்துவ இந்தியாவின்,இணை-படைப்பாளராக மாறும் மேடை!

<u>அனைவரையும் சேரும் அழைப்பு:</u>

விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், பெண்கள், மாணவர்கள், ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் அக்கறை கொண்ட அனைத்து குடிமக்களும் இந்த இயக்கத்தில் உற்சாகத்துடனும் தீர்மானத்துடனும் இணையுங்கள்!

ஒன்றாக ஏற்பாடு செய்யுங்கள்.

புதுமையாக சிந்தியுங்கள்

துணிவாக கேள்வி கேளுங்கள்.

ஒன்றுபட்டு, விஞ்ஞான மனப்பான்மையை ஓர் ஆளுமை கொண்ட சக்தியாக மாற்றுவோம். ஜனநாயக, சமத்துவ மற்றும் நீதியான இந்திய சமூகத்தை கட்டியெழுப்ப!

அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு (AIPSN) உங்களை அழைக்கிறது:

1. இந்த வேண்டுகோளுக்கு உங்கள் ஆதரவை தெரிவியுங்கள்.

2. நாடு முழுவதும் நடைபெறும் தேசிய அறிவியல் மனப்பான்மை தினம் ஆகஸ்ட் 20 (NSTD) நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும்.

3. பகுத்தறிவு, சமூக நீதி மற்றும் ஜனநாயகத்திற்கான இயக்கத்தில் இணையுங்கள்.

நாம் எழுவோம்

நினைவுகூர மட்டுமல்ல, செயல்படுவோம்!

அறிவியல் மனப்பான்மையின் விளக்கை உயர்த்திப் பிடிப்போம்.

அதை அணைக்க முயலும் சமூக-அரசியல் சக்திகள், விசாரணையின் ஒளியையும், சமத்துவத்தையும், ஜனநாயகத்தையும் ஒருபோதும் அணைக்க முடியாது!

ஒற்றுமை மற்றும் உறுதியுடன்,

Dr.சத்யஜித் ராத்

தலைவர், AIPSN

திருமிகு.ஆஷா மிஸ்ரா

பொதுச் செயலாளர், AIPSN

திரருமிகு.அருணாப் மிஸ்ரா

ஒருங்கிணைப்பாளர், அறிவியல் மனப்பான்மை பணியகம்

அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு (AIPSN)

அறிவியல் மனப்பான்மை என்பது - சிந்தனையின் புரட்சி!

ஒன்றுபட்டு செயல்படுவோம் ஒன்றுபட்டு முன்னேறுவோம்!

அறிவியலை தூக்கி நிறுத்துவோம்..

அறிவியலால் உலகை ஆளுவோம்